1978 செப்டம்பர் 11]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. செ. முத்துசாமி: ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள பள்ளிகள் அல்லது தனியார் நிர்வாகத்திலுள்ள பள்ளிகளை அரசு எடுத்துக்கொண்டால் அந்த ஆசிரியர்கள் கடைசியாக என்ன சம்பளம் பெற்றுக்கொண்டிருந்தார்களோ அதுதான் வழங்கப்படுகிறது. அதற்குப் பின்னுல் வழங்கப்படக்கூடிய சலுகைகளை அதாவது பணி வரன்முறைப்படுத்தப்படுதல் போன்ற சலுகைகளை வழங்க ஒரு சரியான உத்தரவை வழங்கி நியாயம் வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இப்போது அரசு ஏற்றுக் கொண்டிருக்கின்ற பள்ளியிலே இருக்கின்ற ஆசிரியர்களுக்கு உடனடியாக இந்தச் சலுகைகளை அவர்களுக்குரிய உரிமைகளை வழங்குவது இல்லை என்பதுதான் இங்கே கேள்வி. அது இதுவரை இருந்து வந்த நிலைமையை எடுத்துக் காட்டுகிறது. அத்தகைய தாமதங்களைத் தவிர்க்க அரசு நிச்சயம் நடவடிக்கை எடுக்கும்.

[பிற்பகல் 4–50]

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: இவ்வாறு தனியார் பள்ளிகளை அரசு மேற்கொள்ளும்போது, அங்குள்ள ஆசிரியர்கள் அந்தப் பள்ளிகளில் பணியாற்றிய காலத்தை, சீனியாரிட்டிக்கு கணக்கில் எடுத்துக் கொள்வதில்லை என்று சொல்லப்படுவது உண்மையா? இது உண்மையானுல், அந்தப் பணிக் காலத்தையும் கணக்கில் எடுத்துக் கொள்ள அரசு தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அரசுப் பணியில் அத்தகைய ஆசிரியர்களை ஏற்றுக் கொள்ளுகிறபோதே, அந்த விதிகளுக்கு ஏற்பதான் பணியில் அமர்த்திக் கொள்கிருேம் என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

M.Ed. Training for School Teachers.

* 66. *Q.*—THIRU V. R. PERIANNAN: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) the year from which the scheme of sending school teachers for M.Ed. Training at Government expenditure has been started;

(*b*) the annual expenditure incurred thereon by the Government; and

(*c*) the period for which teachers trained under this scheme, are working in the Training Centres?

[1978 செப்டம்பர் 11

பள்ளி ஆசிரியர்களுக்கு எம். எட். பயிற்சி

திரு. வி. ஆர். பெரியண்ணன் : மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்:—

(அ) பள்ளி ஆசிரியர்களை அரசாங்கச் செலவில் எம்.எட். (M.Ed.) பயிற்சிக்கு அனுப்பும் திட்டம் எந்த ஆண்டில் இருந்து நடைமுறையில் உள்ளது ?

(இ) ஆண்டு ஒன்றுக்கு இதனால் அரசுக்கு ஆகும் செலவு எவ்வளவு?

(உ) இத்திட்டத்தில் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் எவ்வளவு காலம் பயிற்சி நிலையங்களில் வேலை செய்கிறார்கள் ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) அரசு உயர் நிலைப்பள்ளிகளில் (ஏ பிரிவு) பணி புரியும் ஆசிரியர்களை எம்.எட். பயிற்சிக்கு அரசாங்கச் செலவில் அனுப்பும் திட்டம் 1970-71ம் கல்வி ஆண்டிலிருந்து தொடர்ந்து நடைமுறையில் உள்ளது.

(இ) 20 பள்ளி ஆசிரியர்களை எம். எட். பயிற்சிக்கு அனுப்புவதில் ஆண்டொன்றுக்கு அரசுக்கு ஆகும் செலவு ரூ. 98,000/.

(உ) 1971-72-ல் இருந்து பயிற்சி பெற்ற ஒரு சிலர் பயிற்சிப் பள்ளிகளில் நியமனம் செய்யப்பட்டனர். 1970-71-ம் ஆண்டிலிருந்து 100 ஆசிரியர்கள் அரசுச் செலவில் எம். எட். பயிற்சிக்கு அனுப்பப்பட்டுள்ளனர். எல்லா உதவியாசிரியர்களையும் பயிற்சிப் பள்ளிகளில் நியமனம் செய்ய போதிய பணியிடங்கள் பயிற்சிப் பள்ளிகளில் இல்லாத காரணத்தால், பயிற்சி பெற்ற எல்லா ஆசிரியர்களையும், அரசு பயிற்சிப் பள்ளிகளில் நியமனம் செய்ய இயலாமல் போகிறது. அவர்களது பணியினை S.C.E.R.T. E.L.T. (English Language Teaching) மையங்களில், மாதிரிப் பள்ளிகள் போன்றவற்றிலும் பயன்படுத்தப்படுகிறது.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : இவ்வாறு வேறு போஸ்ட் கிராஜுவேட் பட்டம் பெற்றவர்கள் அரசாங்கச் செலவில் இந்தப் பயிற்சிக்கு அனுப்பப்படுவதில்லை. மாஸ்டர் ஆப் எஜுகேஷன் பட்டம் பெற்றவர்கள் மட்டுமே அரசாங்கச் செலவில் அனுப்பப்படுவதற்கு என்ன காரணம்? வேறு போஸ்ட்-கிராஜுவேட்ஸ் யாராவது அனுப்பப்படுகிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அப்போது இருந்த தேவையின் காரணமாக அதைச் செய்திருக்கிறார்கள்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : இவ்வாறு அரசாங்கச் செலவில் ஆசிரியர்களைப் பயிற்சிக்கு அனுப்பியபோதே, ஒரு குறிப்பிட்ட ஆண்டில் மட்டும் 'பி' பிரிவு பள்ளிகளைச் சேர்ந்த

TRUTH ALONE TRIUMPHS

1978 செப்டம்பர் 11]

ஆசிரியர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்பியிருக்கிறார்கள். ஆனால் தொடர்ந்து வந்த ஆண்டுகளில் 'ஏ' பிரிவு ஆசிரியர்களை மட்டும்தான் அரசாங்கச் செலவில் இந்தப் பயிற்சிக்கு அனுப்பியிருக்கிறார்கள் என்று தெரிகிறது. அப்படியானால் அந்தச் சலுகை ஏன் 'பி பிரிவு ஆசிரியர்களுக்கு வழங்கப்படவில்லை என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: ஏ-பிரிவுகளில் பணியாற்றும் ஆசிரியர்கள்தான் அனுப்பப்படுகிறார்கள் என்று இங்கே விவரம் தரப்பட்டிருக்கிறது. பி-பிரிவுகளில் பணி செய்யும் ஆசிரியர்கள் அனுப்பப்படுவதில்லை என்பது உண்மை. அனுப்பாமலிருப்பதற்கு விதிகள்தான் காரணம். அந்தக் குறையைப் போக்கத்தான் ஏ-பி ஆகிய இரு பிரிவுகளையும் இணைக்கிற முயற்சியில் தற்போது ஈடுபட்டிருக்கிறோம்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: S.C.E.R.T பயிற்சி பற்றியும் அமைச்சர் அவர்கள் தம் விடையில் இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். S.C.E.R.T., N.C.E.R.T. போன்ற பயிற்சிகளுக்குக் கடந்த காலத்தில் ஆசிரியர்களைப் பொறுக்கும்போது, ஒரு குறிப்பிட்ட அமைப்பைச் சார்ந்தவர்களாகவே, அந்த அமைப்பிலிருந்து பட்டியல் பெற்று அனுப்பியிருக்கிறார்கள். இதை எதிர்த்து நாங்கள் எத்தனையோ முறை முறையிட்டும் ஒன்றும் நடக்கவில்லை. எனவே இத்தகைய பாகுபாடுகள் ஏதுமில்லாமல் அனைத்துத் தரப்பு ஆசிரியர்களையும் மேற்சொன்ன பயிற்சிகளுக்கு அனுப்ப ஏற்பாடுகள் செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இந்த வினா S.C.E.R.T. பற்றியதாக இருக்கிறது. தனியாகக் கேள்வி கேட்டால், அது பற்றி விவரம் தரலாம். நான் இங்கே குறிப்பிட்டது M.Ed. பயிற்சி பெற்ற ஆசிரியர்களை அரசு பயிற்சிப்பள்ளிகளில் நியமனம் செய்ய இயலாமல் போவதால் அவர்களது பணியினை S.C.E.R.T, E.L.T. போன்ற மையங்களில், மாதிரிப்பள்ளிகள் போன்றவற்றிலும் பயன் படுத்தப்படுகிறது என்பதுதான்.

திரு. பி. ஆர். தாமஸ்: ஏ பிரிவுப் பள்ளிகளைச் சார்ந்த ஆசிரியர்களும் பி. பிரிவு பள்ளிகளைச் சேர்ந்த ஆசிரியர்களும் இந்தப் பயிற்சிக்கு அனுப்பப்பட்டிருக்கிறார்கள் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். இவ்வாறு தனியார் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் இந்தப் பயிற்சிக்கு அனுப்பி வைக்கப்படுவார்களா அவ்வாறு அனுப்ப வாய்ப்பு இல்லாவிட்டால், அவர்களாக பயிற்சிக்குச் செல்லும் காலங்களில் அவர்களுக்கு ஊதியத்தை வழங்கி பயிற்சிக்கான செலவை ஆசிரியப் பெருமக்களே ஏற்றுக் கொள்ள வழிவகை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்; அரசாங்கம்தான் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி E.R.T. போன்ற நிறுவனங்களை நடத்தி வருகிறது. அவர்களுக்குத்தான் இப்படிப்பட்ட பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் தேவையாக இருக்கிறார்கள். ஆகவேதான் இந்தப் பயிற்சிக்கு அரசாங்கப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களை மட்டும் அனுப்புகிறோம். தனியார் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களை அனுப்பி அவர்களைப் பயன்படுத்திக் கொள்ளும் நோக்கம் நமக்கு இல்லை என்பதால் இந்தப் பிரச்சினைக்கே இடமில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி.ரா. லெட்சுமிகாந்தன்; ஒரு பிரிவு பள்ளிகளைச் சார்ந்த ஆசிரியர்கள்தான் இந்தப் பயிற்சிக்கு அனுப்பப்படுகிறார்கள் என்ற தவறான செய்தி அமைச்சருக்குத் தரப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். எனது மாவட்டமான தென்னாற்காடு மாவட்டத்திலும் வடாற்காடு மாவட்டத்திலும் 'பி' பிரிவு பள்ளியைச் சார்ந்த ஆசிரியர்கள் அப்பயிற்சிக்கு அனுப்பப்பட்டிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

மாற்றுத்தலைவர் (திரு ஈ. எஸ். வெங்கடேசன்); உறுப்பினர் அவர்கள் சுருக்கமாகச் சொல்ல வேண்டும்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் Winter-cum summer Course என்ற ஒன்று நடத்தப் படுகிறது. அதற்கு ஆசிரியர்கள் செல்லும்போது அவர்களுக்குப் பதிலாக substitute ஆசிரியர்கள் போடப்படாததால இதன் காரணமாகப் பணச் செலவு இல்லாததால் ஆசிரியர்கள் படிக்கச் செல்லும் அந்தக் காலத்தை 'on duty' என்று கருத அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம்: இரண்டாவது சொன்ன கருத்தைப் பரிசீலனை செய்யலாம். அடுத்து ஏ—விங் ஆசிரியர்களை மட்டும் அனுப்புவது தவறு என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அது தவறு அல்ல. பி—விங் ஆசிரியர்களை இத்தகைய பயிற்சிக்கு அனுப்பியதுதான் தவறு.

Price of Note-Books.

*67. *Q.*—Thiru V. THANGAPANDIAN: Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether any representation has been received by the Government from the Note-book Manufacturers Association that there will be increase in the price of Note-books in the coming academic year 1978-79, as the Central Government have not so far undertaken the distribution of printing white paper through the State Government; and

(*b*) if so, the action taken thereon?